செ.வெ.எண்:927/2017 நாள்:06.12.2017

# கன்னியாகுமரி மாவட்டத்தில் ஓகி புயலினால் காணமால் மீனவர்கள் பற்றிய தகவல்கள் தெரிவிப்பதற்கான 24 மணி நேரமும் செயல்பாடும் கட்டுப்பாட்டு அறை - மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவிப்பு

----

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஓகி புயலின் காரணமாக இதுவரை தகவல் அறியப்படாத மீனவர்கள் மீட்பு மற்றும் நிவாரண பணிகள் தொடர்பான நடவடிக்கைகளுக்காக "24X7" ஓகி புயல் நிவாரணம் கட்டுப்பாட்டு அறை" மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக முதல் தளத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த கட்டுப்பாட்டு அறையில் இந்திய கப்பற்படை, கடலோர காவல்படை, மீன்துறை மற்றும் அனைத்து துறை சார்ந்த அலுவலர்களும் 24 மணி நேரமும் சுழற்சி முறையில் பணியில் இருப்பார்கள். மீட்பு மற்றும் நிவாரண பணிகள் குறித்த புகார்கள் பெறப்பட்டு உரிய மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். எனவே பொது மக்கள் ஓகி புயலினால் காணாமல் போன தகவல் கிடைக்கப் பெறாத மீனவர்கள் குறித்தும் ஓகி புயல் தொடர்பான கோரிக்கைகள் குறித்தும் மேற்படி கட்டுப்பாட்டு அறை தொலைபேசி எண்.9514459498 எண்ணில் தொடர்பு கொண்டு நிவாரணம் பெறலாம் என கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.